JK TYRE & INDUSTRIES LTD.

Regd. Office: Jaykaygram, PO - Tyre Factory, Kankroli – 313 342 (Rajasthan)
Email Id: investorjktyre@jkmail.com

1. Notice is hereby given that the seventy-third Annual General Meeting (AGM) of the Members of the Company will be held on Thursday, the 6th August 2026 at 3.15 P.M. IST, at the Registered Office of the Company to transact the business as set out in the AGM Notice dated 26th May 2026.

2. The Company has completed despatch of the Annual Report for the financial year ended 31st March 2026 and also the Notice of AGM by email to those members whose email addresses are registered with the Company/Depositories Participants and physically to all other members at their addresses registered with the Company, as on Friday, 26th June 2026 through permitted mode.

3. The Company is providing remote e-voting facility to all its members through electronic voting services arranged by Central Depository Services (India) Ltd. (CDSL). Detailed procedure for remote e-voting is provided in the Notice of AGM. The facility of voting through ballot/polling paper shall also be made available at the AGM venue. However, the members who have cast their vote by remote e-voting may participate in the AGM but shall not be entitled to vote again at the AGM.

4. The remote e-voting period will commence on Monday, 3rd August 2026 from 10.00 A.M. and will end on Wednesday, 5th August 2026 at 5.00 P.M. The remote e-voting shall not be allowed beyond the said date and time. The cut-off date for determining the eligibility of the members to vote by remote e-voting or voting at the AGM is Thursday, 30th July 2026. A person whose name is recorded in the register of members or in the register of beneficial owners maintained by the depositories as on the cut-off date only shall be entitled to avail the facility of remote e-voting as well as voting at the AGM.

5. Any person, who acquires shares and becomes Member of the Company after despatch of the Notice of AGM and holding shares as on the cut-off date i.e., Thursday, 30th July 2026, may follow the same procedure for e-voting as mentioned in the Notice of AGM. The Notice of AGM and the Annual Report for the FY 2025-26 are also available and can be downloaded from the website of the Company at https://www.jktyre.com/investor/annual-reports-notices and of the Stock Exchanges, i.e., www.bseindia.com and www.nseindia.com, respectively. The Notice of the AGM is also available on the website of CDSL at www.evotingindia.com.

6. Any grievances in respect of remote e-voting may be addressed to - Shri Rakesh Dalvi, Assistant Vice President, CDSL, A Wing, 25th Floor, Marathon Futurex, Mafatlal Mills Compound, N.M. Joshi Marg, Lower Parel (E), Mumbai - 400 013; Phone no: 1800 21 09911; Email Id: helpdesk.evoting@cdslindia.com.

7. Record Date: The Record Date for determining entitlement of members for payment of dividend, for the FY 2025-26, if declared at the AGM, is Thursday, 30th July 2026.

Phone: 02952-233400/233000
Fax : 02952-232018
Place : New Delhi
Date : 13th July, 2026

For JK Tyre & Industries Ltd.

Kamal Kumar Manik
Company Secretary

CIN: L67120RJ1951PLC045966; Website: www.jktyre.com

INDIAN METALS & FERRO ALLOYS LIMITED

imfa

Regd. Office: IMFA Building, Bomikhal, P.O. Rasulgarh, Bhubaneswar - 751010, Odisha. Tel: +91 674 2611000, Fax: +91 674 2580020, 2580145
Email: mail@imfa.in, Website: www.imfa.in
Corporate ID: L27101OR1961PLC000428

NOTICE OF ANNUAL GENERAL MEETING, BOOK CLOSURE AND E-VOTING INFORMATION

Notice is hereby given that the Sixty Fourth Annual General Meeting of the Company ("64th AGM") will be convened on Tuesday, 04th August 2026 at 03:00 PM through Video Conference ("VC")/ Other Audio Visual Means ("OAVM") facility to transact the business as set out in the Notice convening the AGM in compliance with the applicable provisions of the Companies Act, 2013 and Rules framed thereunder and the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 read with General Circular No. 03/2025 dated 22nd September, 2025, issued by the Ministry of Corporate Affairs ("MCA Circular/s") and SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 without the physical presence of the Members at a common venue. The deemed venue for the 64th AGM shall be the Registered Office of the Company.

In terms of MCA Circular/s and SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, the Notice of the 64th AGM and the Annual Report for the Financial Year 2025-26 including the Audited Financial Statements for the Financial year ended 31st March, 2026 ("Annual Report") has been sent by email to those Members whose email addresses are registered with the Company/Depository Participants(s). Further in compliance with provisions of Regulation 36 (1) (b) of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, a letter is being sent to those members whose email ids are not registered with Company/Depository participant providing the web-link including the exact path to access the Annual Report and Notice of AGM of the Company. The requirements of sending physical copy of the Notice of the 64th AGM and Annual Report to the Members have been dispensed with vide MCA Circular/s and SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.

The Annual Report 2025-26 of the Company along with Notice and Explanatory Statement of 64th AGM has been uploaded on the website of the Company at **www.imfa.in** under **'Investor'** section [weblink for AGM Notice **https://www.imfa.in/investors/reports-library?uid=AnnualGeneralMeeting** and weblink for Annual Report **https://www.imfa.in/investors/reports-library?uid=AnnualReports**] and available on the website of the Stock Exchanges, i.e. BSE Limited **('BSE')** and National Stock Exchange of India Limited **('NSE')** at **www.bseindia.com** and **www.nseindia.com** respectively. The AGM Notice / Annual Report is also available on the website of National Securities Depository Limited **('NSDL')** at **www.evoting.nsdl.com**. Further, pursuant to Section 91 of the Companies Act, 2013, it is notified that the Register of Members and Share Transfer Books of the Company will remain closed from 01st August 2026 to 04th August 2026 (both days inclusive) for the purpose of AGM and to ascertain the names of members who will be entitled to receive final dividend on the equity shares of the Company for the Financial Year ended 31st March 2026, if approved at the AGM. The date for determining entitlement of members to the final dividend for the financial year ended 31st March 2026, if approved at the 64th AGM, is 31st July 2026. The Dividend shall be subject to deduction of tax at source, as applicable.

Members holding shares either in physical form or in dematerialized form, as on the cut-off date of 28th July 2026, may cast their vote electronically on the Ordinary and Special Business as set out in the Notice of 64th AGM through electronic voting system of National Securities Depository Limited **(NSDL)**. All the Members are informed that:

(i) The Ordinary and Special Business as set out in the Notice of AGM will be transacted through voting by electronic means;

(ii) The remote e-voting facility shall commence on Friday, 31th July 2026 from 9.00 AM **(IST)** and ends on Monday, 3rd August 2026 at 5.00 PM **(IST)**. The remote e-voting shall be disabled by **NSDL** beyond the said date and time and the members shall not be allowed to change it subsequently;

(iii) The cut-off date for determining the eligibility to vote through remote e-voting or through e-voting system during 64th AGM is 28th July 2026;

(iv) Any person who acquires shares of the Company and becomes member of the Company after dispatch of Notice of AGM and holding shares as on the cut-off date i.e. 28th July 2026 may obtain the login ID and password by sending a request at **evoting@nsdl.com** or **investor-relation@imfa.in** . However, if a person is already registered with **NSDL** for e-voting, then existing user ID and password can be used for casting vote;

(v) Members may note that (a) the members who have cast their vote by remote e-voting prior to the AGM may also attend the AGM but shall not be entitled to cast their vote again and (b) members participating in the 64th AGM and who had not cast their vote by remote e-voting, shall be entitled to cast their vote through e-voting system during 64th AGM (c) a person whose name is recorded in the Register of Members or in the Register of Beneficial Owners maintained by the Depositories as on the cut-off date only shall be entitled to avail the facility of remote e-voting as well as e-voting at the AGM;

(vi) In case of any queries, you may refer the Frequently Asked Questions **(FAQs)** for Shareholders and e-voting user manual for Shareholders available at the download section of **www.evoting.nsdl.com** or call on 022- 4886 7000 or send a request to Ms. Pallavi Mhatre, Deputy Vice-President, National Securities Depository Ltd., Trade World, 'A' Wing, 4th Floor, Kamala Mills Compound, Senapati Bapat Marg, Lower Parel, Mumbai - 400013 at email id - **evoting@nsdl.com**.

(vii) Those Members holding shares in physical form, whose email addresses are not registered with the Company, may register their email address by sending, scanned copy of a signed request letter mentioning name, folio, number and complete address, self attested scanned copy of the PAN Card and self attested scanned copy of any document (such as AADHAR Card, Driving Licence, Election Identity Card, Passport) in support of the address of the Member as registered with the Company, by email to **investor-relation@imfa.in**. Members holding shares in demat form can update their email address with their Depository Participant.

For Indian Metals & Ferro Alloys Ltd
Sd/-
(SMRUTI RANJAN RAY)
COMPANY SECRETARY & COMPLIANCE OFFICER

Bhubaneswar
Dated: 13 July 2026

KHAZANCHI JEWELLERS

SINCE 1971

KHAZANCHI JEWELLERS LIMITED

Regd. Office : No.130, NSC Bose Road, Sowcarpet, Chennai - 600079
CIN: L36911TN1996PLC034918 | Website: www.khazanchi.co.in

NOTICE TO SHAREHOLDERS

(1) Notice is hereby given that the **31st Annual General Meeting (AGM)** of the Company is scheduled to be held at **12.00 Noon., on Monday, the August 10, 2026** through Video Conferencing / Other Audio Visual Means (VC/OAVM), in compliance with the General Circular No.09/2023 dated 25.09.2023 read with Circular No.20/2020 dated 05.05.2020 issued by Ministry of Corporate Affairs (MCA) and Circular No.SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 dated 07.10.2023 read with Master Circular No.SEBI/HO/CFD/PoD2/CIR/P/2023/120 dated 11.07.2023 issued by Securities Exchange Board of India (SEBI) (hereinafter collectively referred to as 'Circulars') and also applicable provisions of the Companies Act, 2013 and the Rules made thereunder.

(2) In accordance with the aforesaid MCA Circulars and Circular Nos.SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 dated 13.05.2022 and SEBI/HO/CFD/PoD-2/CIR/2023/4 dated 05.01.2023 issued by SEBI, the Notice of the AGM along with the Annual Report for the year 2025-2026 would be sent by electronic mode to those Members whose e-Mail addresses are registered with the Company / National Securities Depository Limited (NSDL) and the Central Depository Services (India) Limited (CDSL) (referred to as Depositories).

(3) The Annual Report of the Company for the financial year 2025-2026 containing the Notice of the AGM would be made available on the Company's website www.khazanchi.co.in and the website of Stock Exchanges at www.bseindia.com.

(4) The Company would be providing both remote e-Voting facility and e-Voting during the AGM to all the Members to cast their votes on all the resolutions as set out in the Notice of the AGM.

(5) Members whose e-Mail addresses are not registered are requested to contact their respective Depository Participants.

(6) Members are requested to submit Form ISR-1 to the Company vide e-Mail cs@khazanchi.co.in or register with RTA investor service portal https://wisdom.cameoindia.com for updation of Bank Mandate along with original cancelled cheque with name of the Member printed on it or copy of the Bank Passbook or Bank Statement attested by the Bank, for receiving dividends directly in their Bank Accounts through ECS or any other permitted means.

(7) Detailed process and manner of remote e-Voting, e-Voting at the AGM, instructions for attending the AGM through VC / OAVM, etc., would be provided in the AGM Notice.

For Khazanchi Jewellers Limited
Sakshi Jain
Company Secretary

Place: Chennai
Date: July 15, 2026

BEFORE THE MINISTRY OF CORPORATE AFFAIRS GOVERNMENT OF INDIA SHASTRI BHAWAN, DR. RAJENDRA PRASAD MARG, NEW DELHI

COMPANY PETITION DATED 11TH SEPTEMBER, 2025
(under Sections 230 to 232 of the Companies Act, 2013)
CONNECTED WITH
COMPANY AMENDED APPLICATION NO. 24/3/2024-CL-III
DATED 28TH AUGUST 2024
In the matter of the Companies Act, 2013
AND
In the matter of Sections 230 to 232 of the Companies Act, 2013 read with the Companies (Compromises, Arrangements and Amalgamations) Rules, 2016.
AND
In the matter of Scheme of Amalgamation between Shahpura Thermal Power Company Limited, Bansagar Thermal Power Company Limited and M.P. Power Management Company Limited, and their respective shareholders and creditors.
AND

Shahpura Thermal Power Company Limited, (CIN: U01403MP2007SGC019262, PAN: AAKCS9650D), a public limited company incorporated under the Companies Act, 1956, having its Registered Office at Shakti Bhavan, Vidyut Nagar, Rampur, Jabalpur (M.P.) 482008

…Petitioner/Transferor Company No. 1

Bansagar Thermal Power Company Limited, (CIN: U40100MP2011SGC026157, PAN: AAECB6698Q), a public limited company incorporated under the Companies Act, 1956, having its Registered Office at Shakti Bhawan, Rampur, Jabalpur (M.P.) 482008.

…Petitioner/Transferor Company No. 2

M.P. Power Management Company Limited, (CIN: U40109MP2006SGC018637, PAN: AAECM7649C), a public limited company incorporated under the Companies Act, 1956, having its Registered Office at Shakti Bhawan, Rampur, Jabalpur (M.P.) 482008.

…Petitioner/Transferee Company

NOTICE OF HEARING OF THE PETITION

Notice is hereby given that a petition under Sections 230-232 of the Companies Act, 2013 for the approval of the Scheme of Amalgamation of the Petitioner Transferor Companies with the Petitioner Transferee Company was submitted to the Ministry of Corporate Affairs, Central Government, New Delhi.

The Ministry has directed that the hearing in the matter is fixed on Wednesday, 19th August, 2026 at 12:00 PM before Shri Rahul Jain, Joint Secretary, Ministry of Corporate Affairs, 3rd Floor, "A" Wing, Kartavya Bhavan 1, Dr. Rajendra Prasad Road, New Delhi-110001.

Any person desirous of supporting or opposing the said Scheme of Amalgamation should send to the Ministry of Corporate Affairs and to the companies' authorized representative, a notice of his/her intention, signed by him/her or his/her advocate, with his/her name and address, so as to reach the office not later than two days before the date fixed for the hearing.

A copy of the Scheme of Amalgamation can be obtained from the Registered Offices of the respective Petitioner Companies as stated above. The scheme may also be downloaded directly from the official website of M. P. Power Management Company Limited i.e. https://www.mppmcl.com/soa.

Dated this 14th day of July, 2026 at Jabalpur.

Sd/-
MANOJ KUMAR DUBEY
ADVOCATE FOR THE PETITIONER COMPANIES
Flat No. 3, 2nd Floor, Datt Arcade, Phase - 1,
South Civil Lines, Jabalpur, Madhya Pradesh-482001
E-mail : manojdubeyadv@gmail.com
Mobile : +91-9424925639
M.P. Madhyam/126880/2026

svaryu ENERGY — SVARYU ENERGY LIMITED

CIN: U40100TN2008PLC067360
Registered Office: Marathon Furuex, 29th Floor, Unit No. 2916 to 2918, A Wing, Mafatlal Mills Compound, N. M. Joshi Marg, Lower Parel, Delisle Road, Mumbai - 400013, Maharashtra
Tel: 91 22 66864500 || Website: https://svaryu.com || E-mail: info@svaryu.com

PUBLIC NOTICE

Svaryu Energy Limited hereby gives notice that it has made an application before the Central Electricity Regulatory Commission (CERC), New Delhi, bearing Diary No. 468 of 2026 seeking surrender of its Category-IV Inter-State Trading License.

A copy of the said application is available for public inspection at **https://svaryu.com/wp-content/uploads/2026/07/Svaryu-Trading-License-Surrender-Petition-1.pdf**

Any person having objections to the above application may submit the same in writing to: Central Electricity Regulatory Commission

7th Floor, Tower B, World Trade Centre, Nauroji Nagar, New Delhi-110029.

SURYODAY
A BANK OF SMILES

SURYODAY SMALL FINANCE BANK LIMITED

[Corporate Identity Number: L65923MH2008PLC261472]
Registered Office: Unit no.1101, Sharda Terraces, Plot No. 65, Sector 11, CBD Belapur, Navi Mumbai - 400 614
Corporate Office: 7th Floor, Tower No. 1, Seawoods Grand Central, Plot No. R-1, Sector 40, Seawoods, Navi Mumbai - 400 706
Tel No: +91 22 41856700, **Website:** https://suryoday.bank.in/
Email ID: company.secretary@suryodaybank.com and company.secretary@suryoday.bank.in

Notice of the Eighteenth (18th) Annual General Meeting and E-voting information

NOTICE is hereby given that the Eighteenth (**18th**) Annual General Meeting ("**AGM**") of the members of Suryoday Small Finance Bank Limited (the "**Bank**") will be held on **Thursday, August 06, 2026, at 12:30 p.m. Indian Standard Time ("IST")** through Video Conferencing (**"VC"**) / Other Audio-Visual Means ("**OAVM**") to transact the businesses as set out in the Notice convening the 18th AGM.

In compliance with the applicable provisions of the Companies Act, 2013 (the "**Act**") and Rules made thereunder read with General Circulars No. 20/2020 dated May 5, 2020 and subsequent Circulars issued in this regard, the latest being General Circular No. 03/2025 dated September 22, 2025, read with other relevant circulars, issued by the Ministry Corporate Affairs ("**MCA**") from time to time, [collectively referred to as "**MCA Circulars**"], and relevant circulars issued the Securities Exchange Board of India **("SEBI**") from time to time, (hereinafter collectively referred to as "**Applicable Circulars**"), has permitted companies to hold annual general meetings through Video Conferencing **("VC")** or Other Audio Visual Means **("OAVM")** without the physical presence of the members at a common venue. Accordingly, in compliance with the provisions of the Act, SEBI Listing Regulations and the applicable Circulars, the 18th AGM of the Bank is being convened and conducted through VC/OAVM mode, without the physical presence of members. Hence, Members can attend and participate in the AGM through VC/OAVM. Therefore, the Members can attend and participate in the AGM using the VC/OAVM facility. The Bank has appointed KFin Technologies Limited, Registrar and Transfer Agent ("**KFintech" or "RTA**"), to provide facility for e-voting and VC/OAVM facility for the AGM and the attendant enablers for conducting the e-AGM. Members attending the AGM through VC/OAVM shall be reckoned for the purpose of quorum under Section 103 of the Act. The Notice of the 18th AGM along with the Annual Report of the Bank for the Financial Year (**"FY"**) 2025-26 have been sent through electronic mode to all the members of the Bank whose e-mail IDs are registered with the Bank's RTA/ or relevant Depository Participant(s). The dispatch of the Notice of AGM along with the Annual Report to the members through e-mail has been completed on **Tuesday, July 14, 2026**.

In compliance with the provisions of Section 108 of the Act, read with Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014, as amended and Regulation 44 of the SEBI Listing Regulations and Secretarial Standards on General Meetings (**"SS-2"**) issued by the Institute of Company Secretaries of India, the Bank is providing to all its members (holding shares either in physical form or in dematerialised form), the facility to exercise their right to vote on the resolutions proposed to be considered at the 18th AGM through remote e-voting or e-voting during the AGM (collectively referred as "**e-voting**"). The detailed instructions for e-voting are provided in the Notice of the 18th AGM.

1. Members are hereby informed that:
   (i) All of the businesses as set out in the Notice of the 18th AGM shall be transacted through e-voting i.e., through Remote e-voting or voting during AGM (Instapoll).
   (ii) The Cut-off date for determining the eligibility to vote by e-voting system at the AGM shall be **Thursday, July 30, 2026**. A person, whose name appears in the Register of Members/ Beneficial Owners maintained by the Depositories/ KFintech as on the Cut-off Date i.e. **Thursday, July 30, 2026**, only shall be entitled to avail the facility of e-voting.
   (iii) The remote e-voting period shall commence on **Sunday, August 02, 2026, at 9:00 a.m. (IST)** and end on **Wednesday, August 05, 2026, till 5:00 p.m. (IST).**
   (iv) Any person who acquires shares of the Bank and becomes member of the Bank after dispatch of Notice of the AGM and holding shares as on the Cut-off date i.e. **Thursday, July 30, 2026**, may obtain the login ID and password by sending an e-mail at evoting@Kfintech.com . However, if there is already registered with KFintech for e-voting then they can use their existing User ID and password for casting the vote.
   (v) Information and instructions including details of User ID and Password relating to e-voting have been sent to the Members through e-mail. The same login credentials should be used for attending the AGM through VC/OAVM facility.
   (vi) Members may note that:
      a) The remote e-voting shall not be allowed beyond 5.00 p.m. (IST) on **Wednesday, August 05, 2026, till 5:00 p.m. (IST)**.
      b) the facility for e-voting (Instapoll) will also be made available during the AGM and to those members who would be attending the AGM through VC/OAVM and who have not earlier cast their votes on the resolutions through remote e-voting and are otherwise not barred from doing so, shall be eligible to vote through the Instapoll system during the AGM.
      c) the members who have cast their votes by remote e-voting prior to the AGM may also attend the AGM but shall not be entitled to cast their votes again.
   (vii) The voting rights of members shall be in proportion to their shares in the paid-up equity share capital of the Bank as on the Cut-off Date i.e. **Thursday, July 30, 2026,** subject to the provisions of the Banking Regulation Act, 1949, as amended.
   (viii) A copy of the Notice of 18th AGM along with the Annual Report for the FY 2025-26 *inter-alia* indicating the process and manner of remote e-voting and e-voting during AGM have been sent by electronic mode to all those members whose e-mail addresses are registered with the Bank / its RTA or relevant Depositories in accordance with the aforesaid MCA Circulars.
   (ix) Members may note that the Notice of AGM and Annual Report for the FY 2025–26 will also be available on the websites of the Bank (at https://suryoday.bank.in/investor-corner/#disclosure-to-stock-exchanges), website of the Stock Exchanges i.e. BSE Limited (https://www.bseindia.com), National Stock Exchange of India (https://www.nseindia.com) and on the website of Service Provider i.e. **KFintech** (https://evoting.kfintech.com) in compliance with the relevant Circulars.
   (x) in accordance with Regulation 36(1)(b) of the SEBI Listing Regulations, the Bank is also sending a letter to those shareholder(s) who have not so registered their e-mail address with the Bank/RTA or DP, whereby providing the web-link, including the exact path, where complete details of the Annual Report for FY 2025-26, are available.
2. In case of any query and/or grievance, in respect of voting by electronic means, Members may refer to the "Help", "F.A.Q.s" and e-voting user manual available at the 'downloads' section on the website *(bottom corner)* of Bank's RTA at https://evoting.kfintech.com or contact KFin Technologies Limited, Unit: Suryoday Small Finance Bank Limited, Selenium Building, Tower-B, Plot No 31 & 32, Financial District, Nanakramguda, Serilingampally, Hyderabad, Rangareddy, Telangana, India - 500 032, E-mail id: einward.ris@kfintech.com or call to RTA at toll free No. 1800 3094 001 for any further clarifications or write to Company Secretary of the Bank at Corporate Office or at company.secretary@suryodaybank.com and company.secretary@suryoday.bank.in.

Members who have not registered their e-mail address may register their e-mail addresses with the Bank, as mentioned hereunder:

a) **For shareholders holding share(s) in physical form -** SEBI through Section V of the Master Circular for Registrars to an Issue and Share Transfer Agents dated June 23, 2025 has made mandatory for shareholders holding shares of the Bank in physical form, to, *inter-alia* update their KYC, including contact details, e-mail address, Mobile Number, Bank Details, choice of Nominations, etc. by furnishing requisite detail in Form **ISR-1.** In this connection, the form, as notified by SEBI, along with other requisite details, are available at the Bank's website at https://suryoday.bank.in/investor-corner/#form-for-availing-investor-services.

b) **For Demat Holders** – Members holding shares of the Bank in electronic, form can verify/update their respective e-mail addresses with their respective Depository Participant(s).

The payment of final dividend for the Financial Year ended March 31, 2026, upon declaration by the Members at the AGM, will be made, subject to deduction of Tax at Source (TDS), as applicable; to all those beneficial owners holding shares in electronic form as per the beneficial ownership data as may be made available to the Bank by NSDL and CDSL as of the end of business hours on Friday, July 17, 2026 and to Members holding shares in physical form after giving effect to all the valid transmission and transposition in respect of valid requests lodged with the Bank and RTA as of the end of business hours on Friday, July 17, 2026.

For **Suryoday Small Finance Bank Limited**
Sd/-
Krishna Kant Chaturvedi
Company Secretary & Compliance Officer

Place: Navi Mumbai
Date: July 14, 2026



தீவுத்திடலில் இருந்து எர்ணாவூர் வரை செல்லும் 56F வழித்தடப் பேருந்து உயர்நீதிமன்றம், மண்ணடி, வள்ளலார் நகர், கல்லறை சாலை, மணிக்கூண்டு, தண்டையார்பேட்டை, திருவொற்றியூர், விம்கோ நகர், முல்லை நகர் வழியாக இயக்கப்படுகிறது.

ஆவடியில் இருந்து புறப்படும் எண் 61K வழித்தடப் பேருந்து அஞ்சல் நிலையம், பாரதியார் நகர், கோயில்பதாகை, வீராபுரம், டிஎஸ்பி கேம்ப் வழியாக எல்லையம்மன் நகர் வரை இயக்கப்படுகிறது.



15 சிபிஎஸ்இ, இதர வாரிய பள்ளிகள் தொடங்க என்ஓசி

10 பள்ளிகளுக்கு தொடக்கநிலை அனுமதி ஆணை

பள்ளிக் கல்வி அமைச்சர் ராஜ்மோகன் வழங்கினார்

சென்னை

தமிழகத்தில் 10 தனியார் பள்ளிகளுக்கு தொடக்கநிலை அனுமதி ஆணைகளையும், 15 சிபிஎஸ்இ, இதர வாரிய பள்ளிகள் தொடங்குவதற்கான என்ஓசி சான்றுகளையும் பள்ளிக்கல்வி அமைச்சர் ராஜ்மோகன் வழங்கினார்.

இதுதொடர்பாக, பள்ளிக்கல்வித்துறை நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழகத்தில் மாநில தனியார் பள்ளிகள் இயக்ககத்தின் கீழ் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள், சுயநிதி பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள், சிபிஎஸ்இ மற்றும் பிற வாரியப் பள்ளிகள் செயல்படுகின்றன. தனியார் பள்ளிகளுக்கு தொடக்க அனுமதியும் மற்றும் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை தொடர் அங்கீகாரமும் வழங்கப்படுகிறது. தற்போது புதிய அரசு பெறுப்பேற்ற பிறகு ஏற்கெனவே அங்கீகாரச் சான்று கோரி விண்ணப்பித்த தனியார் பள்ளிகளுக்கு எவ்வித காலதாமதமுமின்றி, அங்கீகார ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

15 சிபிஎஸ்இ மற்றும் பிற வாரிய பள்ளிகள் தொடங்க தடையின்மைச் சான்றுகளையும், 10 தனியார் பள்ளிகளுக்கு தொடக்க அனுமதி ஆணைகளையும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் வழங்கினார். உடன் பள்ளிக் கல்வித்துறை செயலர் பி.சந்திரமோகன், பள்ளிக் கல்வி இயக்குநர் எஸ்.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் எஸ். சுகன்யா ஆகியோர்.

அந்த வகையில், கடந்த ஜூன் 16-ம் தேதி 848 பள்ளிகளுக்கான அங்கீகார ஆணைகளை பள்ளிக் கல்வி அமைச்சர் வழங்கினார். அதைத்தொடர்ந்து, ஜூலை 14-ம் தேதி (நேற்று) 15 சிபிஎஸ்இ மற்றும் பிற வாரிய பள்ளிகள் தொடங்க தடையின்மைச் சான்றும் (என்ஓசி), 10 மெட்ரிக் பள்ளிகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு தொடக்க அனுமதி ஆணைகளும் என மொத்தம் 25 ஆணைகளை சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தாளாளர் மற்றும் முதல்வர்களிடம் அமைச்சர் நேரடியாக வழங்கினார். இந்நிகழ்வின்போது, பள்ளிக் கல்வித்துறை செயலர் பி.சந்திரமோகன், பள்ளிக்கல்வி இயக்குநர் எஸ்.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் எஸ்.சுகன்யா ஆகியோர் உடனிருந்தனர்.

சிபிஎஸ்இ, மற்றும் பிறவாரிய பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள், நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள் உள்ளிட்ட தனியார் பள்ளிகளும் தொடங்க அங்கீகாரம் பெற ஜூலை 1 முதல் http://tnschools.gov.in/dms என்ற இணையதளம் வாயிலாகவும், தொடர் அங்கீகாரம் பெற http://emis.tnschools.gov.in என்ற இணையதளம் வாயிலாகவும் ஆன்லைனில் விண்ணப்பித்து அனைத்து ஆவணங்களையும் உள்ளீடு செய்து உரிய ஆணைகளை காலதாமதமின்றி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சாட்ஜிபிடி, ஜெமினி, நோட்புக் எல்.எம். போன்ற

ஏஐ தொழில்நுட்பங்களை பயன்படுத்தி செயலி உருவாக்க பயிற்சி இன்று தொடக்கம்

சென்னை

கிண்டியில் செயல்பட்டு வரும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் செயற்கை நுண்ணறிவை (ஏஐ) பயன்படுத்தி செயலி உருவாக்குவது குறித்த 3 நாள் பயிற்சி வகுப்பு இன்று (15-ம் தேதி) முதல் ஜூலை 17-ம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இந்த வகுப்பில் சாட்ஜிபிடி, ஜெமினி ப்ரோ, நோட்புக் எல்.எம். கிளைடு, ஜேபியர், போல்ட், ஃபயர்பேஸ், ரெப்லிட் போன்ற பிரபலமான தளங்களைக் கொண்டு நேரடியாக செயலிகளை உருவாக்க கற்றுக்கொடுக்கப்படும்.

இத்துடன் முன்னணி ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் பயன்படுத்தும் ஏஐ கருவிகள், செயலிகளை உருவாக்க தேவைப்படும் ஏஐ ப்ரோடோடைப்கள், ப்ராம்ட் இன்ஜினியரிங் முறைகள், ஏஐ வலைதளங்களை உருவாக்குதல், அதற்கான செயல்முறை பயிற்சி, தொழில்துறைக்கு தேவையான தானியங்கி முறைகள், கல்வி, சுகாதாரம், நிதி, சில்லறை வணிகம் போன்ற துறைகளுக்கான பயன்பாட்டு மாதிரிகள், ஏஐ வணிகம் மற்றும் ப்ரோடோடைப்பை முதலீட்டாளர்கள் முன் சமர்ப்பிக்கும் திறன், குறைந்த செலவில் ஸ்டார்ட்-அப் யோசனைகளை பரிசோதித்தல் உள்ளிட்டவை குறித்து விளக்கப்படும்.

பயிற்சியில் பங்கேற்க விரும்பும் 18 வயதுக்கு மேற்பட்ட, 10-ம் வகுப்பு தேர்ச்சியடைந்த ஆண், பெண் அனைவரும் விண்ணப்பிக்கலாம். கணினி அனுபவம் அவசியம். வெளிமாவட்ட பயனாளர்களுக்கு தங்கும் விடுதி ஏற்படுத்தித் தரப்படும்.

கூடுதல் விவரங்களுக்கு www.editn.in அல்லது 8668100181, 9360221280 என்ற எண்களைத் தொடர்பு கொள்ளலாம். பயிற்சியை முடிப்பவர்களுக்கு அரசு சான்றிதழும் வழங்கப்படும்.

தொலைதூரக் கல்வி நிறுவனத்தின் பெயர் மாற்றம்

சென்னை

யுஜிசி விதிமுறையின்படி, சென்னை பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி நிறுவனம், தொலைதூர மற்றும் இணையவழி கல்வி மையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

இது தொடர்பாக, சென்னை பல்கலைக்கழக பதிவாளர் ரீட்டா ஜான் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பல்கலைக்கழக மானியக் குழுவின் திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி திட்டங்கள், இணையவழி திட்டங்கள்-2020 விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சென்னை பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி நிறுவனம் (Institute of Distance Education) என்பது தொலைதூர மற்றும் இணையவழி கல்வி மையம் (Centre for Distance and Online Education) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சி சொத்து வரி வசூலிக்க அவகாசம் நீட்டிப்பு

சென்னை

சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சென்னை மாநகராட்சிக்கு பிரதான வரி வருவாயாக சொத்து வரி இருந்து வருகிறது. இதன் மூலமே, சென்னை மாநகருக்கு தேவையான அடிப்படை கட்டமைப்புகள், குப்பை திடக்கழிவுகள் அகற்றுதல், தெரு விளக்குகள், பூங்காக்கள், சாலைகளை பராமரித்தல், பொது சுகாதாரம் நோய் தடுப்பு பணி போன்ற அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், சென்னையில் உள்ள 14.23 லட்சம் உரிமையாளர்களில் 6.98 லட்சம் சொத்து உரிமையாளர்கள் நிலுவையின்றி சொத்துவரி செலுத்தியுள்ளனர். மீதமுள்ள 7.24 லட்சம் சொத்து உரிமையாளர்களிடம் இருந்து ரூ.1,018.99 கோடி வசூலிக்கப்பட வேண்டும்.

இதையொட்டி, சென்னையில் நிலுவை சொத்து வரி வசூலிப்பதற்கான சிறப்பு முகாம், ஜூலை 3 முதல் ஜூலை 17-ம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, ஜூலை 3 முதல் 13-ம் தேதி வரை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து நிலுவை சொத்து வரி செலுத்துவதற்கான சிறப்பு முகாம் வரும் 31-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்கு சொத்துவரி செலுத்த வேண்டிய உரிமையாளர்கள், சென்னை மாநகராட்சியால் காலை 8 மணி முதல் மாலை 6 வரை மண்டலங்கள் மற்றும் வார்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு முகாம்களில் தங்களது நிலுவை சொத்துவரி தொகையை செலுத்தி, தனிவட்டி விதிப்பினை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைநிலை ஆசிரியர்களின்

ஊதிய முரண்பாட்டை களைய வேண்டும்

அமைச்சரிடம் ஆசிரியர் கூட்டமைப்பு வலியுறுத்தல்

சென்னை

இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளைக் களைவது, உயர்கல்விக்கு மீண்டும் ஊக்க ஊதிய உயர்வு என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு பள்ளிக்கல்வி அமைச்சரிடம் ஆசிரியர் கூட்டமைப்பு நேரில் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் (டிட்டோஜாக்) மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள், தலைமைச் செயலகத்தில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகனை நேற்று சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளைக் களைய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு முன்பு வழங்கப்பட்ட உயர்கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வை மீண்டும் வழங்க வேண்டும். தேர்தல் வாக்குறுதியின்படி, அரசு ஊழியர்களுக்கு மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

பணியில் உள்ள ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி மதிப்பெண்ணைக் குறைக்க வேண்டும், பணி அனுபவம் மற்றும் உயர்கல்வி தகுதிக்கேற்ப வெயிட்டேஜ் மதிப்பெண்கள் வழங்க வேண்டும். பாடத்திட்டத்துக்கு அப்பால் கேட்கப்பட்ட வினாக்களுக்கு முழு மதிப்பெண் தர வேண்டும்.

ஆசிரியர்களைப் பெரிதும் பாதிக்கக்கூடிய அரசாணை 243-ஐ ரத்து செய்ய வேண்டும். அரசு பள்ளிகளில் உள்ள ஆசிரியர் காலியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். மாற்றுத் திறனாளிகள், தீவிர நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் 55 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவை பெற்றுக் கொண்ட அமைச்சர் ராஜ்மோகன், கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார் என தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் டி.ஆர். ஜான் வெஸ்லி தெரிவித்தார்.

தமிழ்நாடு பாடநூல் கழக புதிய தலைவராக பொறுப்பேற்ற லயோலா மணி.

தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் பொறுப்பேற்பு

சென்னை

தமிழ்நாடு பாடநூல் கழக புதிய தலைவராக லயோலா மணி பொறுப்பேற்றார்.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவராக லயோலா மணி நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டார். அவருக்கு பணி நியமன ஆணையை தமிழக முதல்வர் விஜய் வழங்கினார்.

இந்நிலையில், சென்னை, நுங்கம்பாக்கம், கல்லூரிச் சாலையில் உள்ள பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் (டிபிஐ) உள்ள பாடநூல் கழக தலைமை அலுவலகத்தில், லயோலா மணி நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு பாடநூல் கழக மேலாண் இயக்குநர் ஆர்.வி. ஷஜீவனா, உறுப்பினர் செயலர் சி.உஷாராணி மற்றும் அலுவலர்கள், ஊழியர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

பின்னர், லயோலா மணி செய்தியாளர்களிடம் கூறுகையில், "தமிழக முதல்வர் எனக்கு பொறுப்பான பதவியை கொடுத்துள்ளார். அந்த பொறுப்பை உணர்ந்து பொறுப்புடன் செயல்படுவேன். எனது சிறப்பான பணியை, செயல்பாடு மூலம் வெளிப்படுத்துவேன்" என்றார்.

நவம்பர் 1-ம் தேதியை தமிழ்நாடு நாளாக கொண்டாட அன்புமணி வலியுறுத்தல்

சென்னை

'தமிழ்நாடு நாள் நவ.1-ம் தேதி தான். திமுகவின் வரலாற்று திரிபை தவெக அரசு பின்பற்றக் கூடாது' என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஜூலை 18-ம் நாள் - தமிழ்நாடு நாளையொட்டி, தமிழகம் முழுவதும் பள்ளிகளில் 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு தமிழ் மொழியின் பெருமை, தமிழகத்தின் வரலாறு ஆகியவை குறித்து பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரை போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படும் என்று அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்திருக்கிறார்.

தமிழ் மொழி வளர்ச்சி மற்றும் அதன் பெருமைகளை பரப்புவதற்கான இத்தகைய பணிகள் வரவேற்கத்தக்கவை. ஆனால், இவற்றின் மூலம் வரலாற்றைத் திரிக்கும் முயற்சி தொடர்வதை அனுமதிக்க முடியாது.

'தமிழ்நாடு' என்ற பெயரில் இப்போது அழைக்கப்படும் நிலப்பரப்பு புதிய சென்னை மாகாணத்தில் இருந்து பிரிந்து புதிய மாநிலங்களாக உருவாக்கப்பட்ட கர்நாடகம், கேரளம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களும், புதுச்சேரி யூனியன் பிரதேசமும் நவம்பர் ஒன்றாம் தேதியைத் தான் முறையே கர்நாடகம் நாள், கேரளம் நாள், ஆந்திரம் நாள், புதுச்சேரி நாள் என்று கொண்டாடி வருகின்றன. ஆனால், 2021-ம் ஆண்டில் முதல்வராக பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின், சம்பந்தமே இல்லாமல் ஜூலை 18-ம் தேதி தமிழ்நாடு நாளாக கொண்டாடப்படும் என்று அறிவித்தார்.

ஜூலை 18 என்பது தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்ட நாள்தான். ஒரு மாநிலம் பிறந்த நாளைத்தான் அம்மாநில நாளாகக் கொண்டாட முடியும். பெயர் சூட்டப்பட்ட நாளையோ, ஒரு குறிப்பிட்ட பெயரை சூட்டலாம் என்று கோரிக்கை வைக்கப்பட்ட நாளையோ பிறந்த நாளாக கொண்டாட முடியாது. இது வரலாற்றைத் திரிக்கும் அபத்தமான செயல் ஆகும்.

இந்த வரலாற்றுத் திரிபை தவெக அரசும் பின்பற்றுவதும், நியாயப்படுத்துவதும் தமிழகத்தின் வரலாற்றுக்கு செய்யப்படும் துரோகம். தமிழ்நாடு நாள் என்றால் அது நவ.1-ம் தேதி தான். அதுதான் மக்கள் மனதில் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அண்ணா பல்கலைக்கழகத்தில்

வேலை வாங்கித் தருவதாக ரூ.18 லட்சம் மோசடி

ஊழியர் உட்பட 5 பேர் மீது வழக்கு

சென்னை

அண்ணா பல்கலைக்கழகத்தில் அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறி, ரூ.18 லட்சம் பெற்று மோசடி செய்த புகாரில், பல்கலைக்கழக ஊழியர் உட்பட 5 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சென்னை புதிய பெருங்களத்தூர் பகுதியைச் சேர்ந்த தினேஷ்குமார் (38), தனியார் நிறுவனத்தில் டெலிவரி ஊழியராகப் பணியாற்றி வருகிறார். இவருக்குக் கடந்த 2025-ம் ஆண்டு கோபிநாத் என்ற எலக்ட்ரீஷியனுடன் அறிமுகம் கிடைத்துள்ளது. அவர் தானும் தனது சகோதரர் சரவணனும் அரசு வேலைக்காக முயன்று வருவதாக கோபிநாத்திடம் தெரிவித்துள்ளார். இதைக் கேட்ட கோபிநாத் தனது நண்பர் கிஷோர் என்பவரை அறிமுகப்படுத்தினார்.

கிஷோர் அவர்களை அமர்பிரசாத் என்பவரிடம் அழைத்துச் சென்றுள்ளார். அமர்பிரசாத் தனது தம்பி சசிகுமார் அண்ணா பல்கலைக்கழகத்தில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றி வருவதாகவும், அவருக்குப் பெரிய மனிதர்களுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதால் எளிதாக வேலை வாங்கித் தர முடியும் என்றும் ஆசை வார்த்தைகளைக் கூறியுள்ளார்.

இவர்களின் பேச்சை உண்மை என்று நம்பிய தினேஷ்குமார் மற்றும் அவரது சகோதரர், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அண்ணா பல்கலைக் கழக வளாகத்துக்குள்ளேயே வைத்து சசிகுமாரிடம் ரூ.18 லட்சத்தை நேரில் கொடுத்ததாக கூறப்படுகிறது.

பணத்தைப் பெற்றுக் கொண்ட சசிகுமார் மற்றும் அவரது கூட்டாளிகள், நீண்ட நாட்களாகியும் வேலை வாங்கித் தரவில்லை. பணத்தைத் திரும்பக் கேட்டபோதும் முறையாக பதிலளிக்காமல் இழுத்தடித்து ஏமாற்றி வந்துள்ளனர்.

இதையடுத்து தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த தினேஷ்குமார், இதுகுறித்து கடந்த 12-ம் தேதி கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில், அண்ணா பல்கலைக்கழக ஊழியர் சசிகுமார் உட்பட கூட்டாளிகள் 5 பேர் மீதும் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இது தொடர்பாகத் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

வேலை வாங்கித் தருவதாகக் கூறி

நேபாளப் பெண்ணிடம் அத்துமீறிய கார் ஓட்டுநர் கைது

சென்னை

வேலை வாங்கித் தருவதாகக் கூறி, நேபாள நாட்டைச் சேர்ந்த இளம்பெண்ணிடம் தவறாக நடக்க முயன்ற கார் ஓட்டுநரை, போலீஸார் கைது செய்தனர்.

நேபாள நாட்டைச் சேர்ந்த 25 வயது இளம் பெண் ஒருவர், சென்னை அண்ணா நகர் பகுதியில், தனது கணவர் மற்றும் குழந்தையுடன் வசித்து வருகிறார். அவர், அதே பகுதியில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் ஹவுஸ்கீப்பிங் பணியாளராக வேலை பார்த்து வருகிறார்.

அதே குடியிருப்பில், வாடகை கார் ஓட்டி வரும் திருமுல்லைவாயில் அடுத்த புத்தூரைச் சேர்ந்த ஆனந்தன் (37), அந்தப் பெண்ணிடம் தனது அலுவலகத்தில் ஹவுஸ்கீப்பிங் வேலை இருப்பதாகக் கூறி, அதற்கு முன்பணமாக ரூ.1,000 தருவதாகவும் ஆசை காட்டியுள்ளார்.

வேலைக்கான முன்பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறி, அந்தப் பெண்ணை குடியிருப்பின் மொட்டை மாடிக்கு ஆனந்தன் நேற்றுமுன்தினம் அழைத்துச் சென்றுள்ளார். அங்கு யாரும் இல்லாத சூழலைப் பயன்படுத்தி, அந்தப் பெண்ணிடம் தகாத முறையில் நடக்க முயன்றுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த அந்தப் பெண், அவரிடமிருந்து தப்பித்து கீழே வந்து தனது கணவரிடம் நடந்தவற்றை கூறியுள்ளார்.

உடனடியாக, பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர், அண்ணா நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில், போலீஸார் ஆனந்தனை கைது செய்து சிறையில் அடைத்தனர்.